பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ஒளி நூலகம்.



Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

மடல் 11 வள்ளுவர் ஆண்டு 2027 கார்த்திகை 04 செவ்வாய்க்கிழமை (19-11-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 276

# அடுத்த ஆண்டு இறுதிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு!

## சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, நவம்பர் 19

1997 ஆம் ஆண்டு இறுதிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டுவிடும். யுத்தத்தை இழுத்தடிப்பது எமது நோக்கமல்ல.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க "சண்டே ரைம்ஸ்" ஆங்கில வார இதழுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வு பின்தள்ளிப் போவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியை ஜனாதிபதி குற்றஞ்சாட்டினார்.

நாம் முன்வைத்துள்ள இனப்பிரச்சினை தொடர்பான தீர்வு யோசனைக்கு ஐ.தே.க. ஆதரவு வழங்க முன்வரவில்லை. இது தொடர்பாக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை மூன்று தடவைகள் சந்தித்துப் பேசினோம். அவரைக் கெஞ்சிக் கூடப்பார்த்தோம். ஆனால் அவர் ஆதரவு தரப் பின்னிற்கிறார் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க "சண்டே ரைம்ஸ்" ஆங்கில வார இதழுக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

கேள்வி:- அரசாங்கம் யுத்தத்தில்தான் நம்பிக்கை கொண்டு அதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடிவு செய்துள்ளதா?

பதில்:- நாங்கள் யுத்தத்தில் நம்பிக்கை வைக்கவில்லை. யுத்தத்தில் நம்பிக்கை வைக்காததால்தான் நாங்கள் விடுதலைப் புலிகளு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விமான நிலையம் சென்ற இருவர் கைது

கொழும்பு, நவ. 19

கொழும்பு இரட்சண்ய சேனை விடுதியில் வைக்கப்பட்டுள்ள கோப்பாய் யுவதி சித்திரா இராஜேந்திரனை அழைத்துச் செல்வதற்காக விமான நிலையம் சென்றிருந்த கதிரேஸ் மற்றும் அவரின் மகன் ராஜ்மோகன் ஆகிய இருவரும் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரஸ்தாப கோப்பாய் யுவதி டென்மார்க்கிலிருந்து நாடு கடத்தப்பட்டு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்து இறங்கிய சமயம் இவர்கள் இருவரும் விமான நிலையம் சென்றிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த யுவதியின் தந்தையார் கொழும்பு வந்ததும் அவரிடம் இவரை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக இவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார். (இ-ரி)

## மோதல்

கிளிநொச்சிக்குத் தென்மேற்கே 3 கிலோ மீற்றர் தொலைவில் நிகழ்ந்த சம்பவம் ஒன்றில் பாதுகாப்புப் படையினர் புலிகள் இயக்க உறுப்பினர்களை மறைந்திருந்து தாக்கியதில் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் பாதுகாப்புப் படையினருக்கு உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

## சீரற்ற காலநிலையால் கப்பல்கள் வரவில்லை

திருகோணமலை, நவ. 19

கடற்கொந்தளிப்பு காரணமாக திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்குமான பயணிகள் கப்பல் சேவை நேற்று இடம் பெறவில்லை.

திருகோணமலையில் இருந்து 3 கப்பல்கள் பயணிகளுடன் காங்கேசன் துறை நோக்கிப் புறப்பட விருந்ததாகவும் —

கடற்கொந்தளிப்பு காரணமாக அவை காங்கேசன் துறைக்கு வரவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கப்பல்களில் இங்கிருந்து 575 பயணிகள் திரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் வேவு விமானம்

இராணுவ உளவு விமானம் ஒன்று நேற்று முன்தினம் காலை வன்னிப் பகுதியை வட்டமிட்டு வேவு பார்த்ததாக செய்தி ஒன்று தெரிவித்தது.

வன்னிப் பகுதியில் குண்டு வீச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கலாம் என மக்கள் அஞ்சுவதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

## சனி-ஞாயிறில் எவரும் வவுனியா வரவில்லை

வவுனியா, நவ. 19

வடபகுதியிலிருந்து வவுனியாவுக்கு பொதுமக்கள் வருவது கடந்த சனிக்கிழமையிலிருந்து முற்றாக நின்றுவிட்டது என வவுனியாவிலுள்ள மூத்த அதிகாரி ஒருவரை ஆதாரம் காட்டி "லங்காதீப" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வடபகுதியிலிருந்து வரும் பொதுமக்களைப் பரிசோதிக்கும் தாண்டிக்குளம் சோதனைச் சாவடிக்கு ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்வரை ஒருவர் கூட வரவில்லை என அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

## 11 படையினருக்கும் டிச. 2 வரை விளக்கமறியல்

கொழும்பு, நவ. 19

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தியை கற்பழித்தமை மற்றும் அவரையும் அவரது தாயார், சகோதரர், அயலவர் ஆகியோரைக் கொலை செய்தமை ஆகியவை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூன்று பொலீஸார் மற்றும் எட்டு இராணுவச் சிப்பாய்களை அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் முனிதாஸ நாணயக்கார நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

மேற்படி சந்தேக நபர்கள் நேற்று கொழும்பு ஹல்ஸ்டோர்ப்பில் பிரதம நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் பற்றிய விசாரணைகள் இன்னமும் பூர்த்தியாகாததால் சந்தேக நபர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு பொலீஸார் கோரினர்.

இதனையடுத்து எதிர்வரும் இரண்டாம் திகதி யாழ்ப்பாண நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யுமாறு கொழும்பு பிரதம நீதிவான் உத்தரவிட்டார். [உ-4-10]

# ஆயுதங்களை கீழே வைக்க கேட்டால் பேச்சுக்கள் இழுத்தடிக்கப்படலாம்

## பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ. 19

விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த அரசு விதித்துள்ள நிபந்தனைகளில் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்ற நிபந்தனையை அரசு தளர்த்த வேண்டும். இந்த நிபந்தனையை வலியுறுத்தினால் பேச்சுவார்த்தை இழுத்தடிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம் என நான் ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளேன்.

பிரதித் தொலைத்தொடர்பு அமைச்சர் ஹிஸ்புல்லா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் செவன உதவித்திட்டத்தின் கீழ் 400 வறியகுடும்பங்களுக்கு காசோலைகள் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பிரதி அமைச்சர் உரை நிகழ்த்தினார். அவர் மேலும் கூறியதாவது:

ஆயுதப் போராட்டத்தினால் மட்டும் இனப்பிரச்சினைக்கு புலிகள் தீர்வுகாண முடியாது. அதேபோல இராணுவ நடவடிக்கைகள் மூலம் இன்னும் 10 வருடங்கள் சென்றாலும் அரசாங்கத்தினால் அமைதியை ஏற்படுத்த முடியாது. ஜனாதிபதி இதய சுத்தியோடு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தைக்கான நேசக்கரத்தை நீட்டியிருக்கின்றார்.

இது தொடர்பாக புலிகளும் தமது கருத்தினைத் தெரிவிக்க வேண்டும்.

சர்வதேச மட்டத்தில் புலிகள் அமைப்பு உன்னதமான இடத்தை வகிக்கிறது. சர்வதேச நாடுகள் ஆயுதக் குழுக்களுடனான சமரசத் தீர்வு

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே. கட்சி ஆதரவாளர்கள் மீது ஆனமடுவ பகுதியில் தாக்குதல்!

## அதனை ஆட்சேபித்து ஆயிரம்பேர் சத்தியாக்கிரகம்

கொழும்பு, நவ. 19

ஆனமடுவ தொகுதியில் வெள்ளிக்கிழமை ஐ.தே.க. உறுப்பினர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை ஆட்சேபித்து சுமார் ஆயிரம் பேர் வரை சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர்.

அங்குள்ள சனசமூக நிலையம் முன்னால் இந்தச் சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டது.

சிலாபம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அசோக வடிகமங்காவவும் இந்தச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டார்.

தாக்குதல் நடத்தியவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்று இவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஆனமடுவவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தை நடத்துவது தொடர்பான நடவடிக்கையின் போதே ஐ.தே.க. ஆதரவாளர்கள் தாக்கப்பட்டனர்.

சத்தியாக்கிரகம் நடந்து கொண்டிருந்த சமயம் நகரில் வெடிகளைக் கொளுத்தவும் டயர்களை எரிக்கவும் சிலர் முயன்றனர் என்றும் —

அவர்களை பொலீஸார் கைது செய்தனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-ரி)

## நீதிமன்றத்தின் முன்னால் பெண்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ. 19

சுண்டுக்குளி மாணவி கிருஷாந்தி மற்றும் அவரது தாயார், சகோதரர், அயலவர் ஆகியோர் நாவற்குழிப் பகுதியில் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான நீதிமன்ற விசாரணையைத் துரிதப்படுத்தக் கோரி பெண்கள் உரிமை இயக்கத்தைச் சேர்ந்த சுமார் நூறு பெண்கள் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் முன்னால் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

செய்தி ஏஜென்ஸிகள் இத்தகவலை வெளியிட்டன.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த எவரும் நீதிமன்றத்தில் ஆஜராகாதது குறித்து பலதரப்பட்டவர்களும் அதிருப்தி தெரிவித்ததாகவும் —

தீங்கிழைத்தவர்களுக்கு — உண்மையாக — கடுமையான — தண்டனையை வாங்கிக் கொடுப்பதில் அரசு தீவிரமாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் [illegible] நூலகம்.



## நன்றி நவிலல்

அமரர்

### செல்வி இரகுநாதன் சுந்தராம்பாள்

இறைவனின் மகிமைக்குள் சேர்ந்து விட்ட எனது அன்பு மகள் அமரர் செல்வி இரகுநாதன் சுந்தராம் பாளின் இறுதிக் கிரியைகளில் கலந்து, தொண்டுகள் பல செய்து மரண இரங்கலுரையாற்றிய யாழ். சலுசலா மூகாமையாளர், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரிய கழகத்தினர், மாணவர்கள், வணிக மாணவர்கள், உயிரியல் மாணவர்கள், யாழ். விலை மதிப்பீட்டுத் திணைக்கள ஊழியர்கள், கொக்குவில் கிழக்கு வளர்மதி சனசமூக நிலையத்தினர், யாழ். மாநகராட்சி மன்ற ஊழியர்கள், மணி ரியூசன் இயக்கு நர், உயர் வகுப்பு மாணவ மாணவிகள், உற்றார், உறவினர், நண்பர்கள், பொது மக்கள் அனைவருக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும், கொழும்பில் இருந்து உடன் வரும் ஏற்பாடுகளைச் செய்து தந்த பிரதம மதிப்பீட்டாளர் திரு. றோய் டீ சில்வா அவர்களுக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக் கும் எனது குடும்பத்தின் சார்பில் நன்றிகளை நவில் கின்றேன்.

வணக்கம்!

நா. இரகுநாதன்
(தந்தை)
(விலை மதிப்பீட்டுப் பரிசோதகரும்
வங்கி மதிப்பீட்டாளரும்)

'சாயி பானு'
சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில்.

(43708)

## ஓர் நற்செய்தி!

12X10 படம் பெருப்பிக்க — 400 ரூபா
8X6 படம் பெருப்பிக்க — 200 ரூபா

### சித்திரகலா

படப்பிடிப்பாளர்

பாஸ்போட் படம் — 100 ரூபா
தேசிய அடையாள அட்டை 50 ரூபா

நல்லூர்.

(43710)

உ

அகில இலங்கை

## சைவக் குருமார் அர்ச்சகர் சபை

### விசேட கூட்டம்

காலம்: 20 - 11 - 1996 புதன்கிழமை
முற்பகல் 11.00 மணிக்கு
இடம்: அச்சுவேலி தீத்தாங்குளப்
பிள்ளையார் கோயில் மண்டபம்.

ஷெ சபையின் சகல உறுப்பினர்களும், பழைய அங்கத்தவர்களும், புதிதாக இணைய விரும்பும் அங் கத்தவர்களும் விசேட கூட்டத்திற்குச் சமுகம்தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சோ. தண்டாயுதபாணிக் குருக்கள்
தலைவர்

வல்வை முத்துமாரி அம்மன்
தேவஸ்தானம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சகமாணவன்
அ. ஸ்ரீஸ்கந்தாவின் தந்தையாரான

### சிற்றம்பலம் அமரேசன்

(யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி பிரதி அதிபர்)

அவர்களின் மரணத்தையிட்டு அவர்களது குடும்பத் தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள் கிறோம்.

யாழ் தொழில்நுட்பக் கல்லூரி
H N.D.A 2 ஆம் வருட மாணவர்கள்
(1996 Day)

(8984)

## கண்ணீர் அஞ்சலி

எமது சாவகச்சேரி கிளையில் கடமையாற்றும்
சக ஊழியரான செல்வி ரஜீவி கதிரவேலு
அவர்களின் சகோதரி

### திருமதி கோவிந்தராஜா தயாரூபி

அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது கவலையை யும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள் கிறோம்.

மக்கள் வங்கி,
யாழ் நவீன சந்தைக்கிளை,
ஊழியர் நலன்புரிச் சங்கம்.

[8983]

## ஒளிவிழா

வடமராட்சி, நவ 19

அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை ஒளிவிழா இன்று 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

[இ-173]

## 6,104 அகதிகள் தமிழகம் சென்றனர்

சென்னை, நவ. 19

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் இருந்து ஆறாயிரத்து 104 இலங்கைத்தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் வந்துள்ளனர் என்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆனந்த் நேற்றுத் தெரிவித் தார்.

இவர்களை பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பும் பணி தொடர்ந்து நடை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## அ. அட்டை வழங்க நடவடிக்கை

வடமராட்சி, நவ. 19

வடமராட்சி வடக்கு பருத் தித்துறை பிரதேச செயலர் பிரிவில் விசேட அடையாள அட்டைக்கான புகைப்படங் கள் எடுக்கப்பட்டு வருகின் றன.

கிராமசேவகர் பிரிவுகள் ரீதி யாக தினம் தோறும் புகைப் படம் பிடிக்கும் பணி நடை பெற்று வருகிறது.

இம் மாதம் 22 ஆம் திகதி யுடன் விசேட அடையாள அட்டைக்கான புகைப்படம் பிடிக்கும் பணி முடிவடையும் என வடமராட்சி பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

(இ)

## களுத்துறை தமிழ்க் கைதிகள் கோரிக்கை

கொழும்பு, நவ. 19

தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தொடர்பாக ஜனாதிபதி மற் றும் நாடாளுமன்ற மட்டத் துக்கு கொண்டு சென்று நீதி பெற்றுத்தருவதற்கு தமிழ்க் கட்சி எம். பிக்கள் செயற்பட வேண்டும்.

களுத்துறைச் சிறைச்சாலை யில் தடுத்து வைக்கப்பட் டுள்ள தமிழ்க் கைதிகள் கடந்த வியாழனன்று ஈ. பி. டி. பி. நாடாளுமன்ற உறுப் பினர்களிடம் மேற்கண்ட வாறு வேண்டுகோள் விடுத் தனர். (இ-3)

## பருத்தித்துறை உடுப்பிட்டி மினிபஸ் சேவை

வடமராட்சி, நவ. 19

உடுப்பிட்டியிலிருந்து பருத் தித்துறைக்கு மினி பஸ்சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

தினமும் காலை 7.15 மணிக்கு உடுப்பிட்டியிலிருந்து புறப்படும் மினிபஸ் வல்வெட் டித்துறை, பொலிகண்டி ஊடாக பருத்தித்துறையை வந்தடைகிறது

இச் சேவையினால் மாண வர்கள், அரச ஊழியர்கள் ஆகியோர் பெரும் பயன டைந்து வருகின்றனர்

[இ]

## திருவிளக்குப் பூசை

நல்லூர் ஸ்ரீ வீரமா காளி அம்பாள் கோவிலில் 24 - 11 - 96 ஞாயிற்றுக் கிழமை 3 மணிக்கு திரு விளக்குப் பூசை நடை பெறும். பூசையில் பங்கு பற்றுவோர் காரியாலயத் தில் பதிந்து கொள்ளவும்.

தேவஸ்தானம்.

(43705)

## மட்டக்களப்பின் ஒருபகுதி இருளில் மூழ்கியது

மட்டக்களப்பு மாவட்டத் தில் பெரியகல்லாறு, கோட் டைக்கல் பகுதிகளுக்கான மின்சாரம் கடந்த சனிக் கிழமை முதல் துண்டிக்கப்பட் டதால் அந்தப் பகுதிகள் இரு ளில் மூழ்கியுள்ளன.

மட்டக்களப்பு — கல்முனை வீதியில் மருதமுனைக்கு அரு கில் மின்கம்பங்கள் சேதமாக் கப்பட்டதாலும் —

வெலிகந்த — புனானை மின்சார இணைப்பில் உள்ள சில கம்பங்கள் சேதமாக்கப் பட்டதாலும்— இந்தப்பகுதி மின்சாரம் துண்டிக்கப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-150)

## தமிழ்மொழி செயல்நூல்-ஆண்டு 11

அரசினர் நடத்தும் க. பொ. த. (சா. த) பரீட்சை யில், தமிழ்மொழி, வினாத்தாள்களைத் தழுவிய மாதிரி வினாத்தாள்கள் பத்து (10) கொண்டது.

- ★ வினாத்தாளின் மூன்று பகுதிகளும் அமைந்தது.
- ★ விரிவான விடைக்குறிப்புக்கள் உடையது.
- ★ விசேட சித்திக்குத் துணைபுரிவது.

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி யோண் புஸ்பம்

யாழ்ப்பாணம், 245, ஆஸ்பத்திரி வீதியில் வசித்து, பின்னர் இல 01, பாரதி வீதி, திருகோணமலையில் வசித்தவருமாகிய திருமதி யோண் புஷ்பம் 16-11-96 இல் திருகோணமலையில் காலமானார்.

இவர் காலஞ் சென்ற A. V. போண் (பிரதம உத்தியோகத்தர், ஓய்வு பெற்ற அரசாங்க மது பரி பாலன திணைக்களம்) அவர்களின் மனைவியாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றேன்.

தகவல்!
J. P நீக்கலஸ்
(சகோதரன்)

245, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(48695)

### சிற்றம்பலம் அமரேசன்

B.A., Dip in. Ed.

[பகுதித் தலைவர், யா/ செங்குந்த இந்துக் கல்லூரி]

வேலணையைப் பிறப்பிடமாகவும் திருநெல் வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சி. அமரேசன் ஆசிரியர் 17 - 11 - 96 ஞாயிறு அன்று சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற மு. சி. சிற்றம்பலம் - இலட் சுமிப்பிள்ளையின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென் றவர்களான நன்னித்தம்பி - அன்னப்பாவின் மருமக னும், பரமேஸ்வரியின் [ராணி] பாசமிகு கணவரும், சிறீஸ்கந்தா [மாணவன், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி H. N D. A. II]. ஸ்ரீஸ்ராம், ஸ்ரீ சிவகாமி [மாணவி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், சரவணபவன் [V. J. S Group], திருமதி ந. விருத்தாசலம் ஆகியோரின் சகோதரனும், காலஞ் சென்ற நடராசா, ச. விஜயலட்சுமி, பரமசிவம் [காப் புறுதிக் கூட்டுத்தாபனம், வவுனியா], சிறீதரன் [மகா வலி சபை, கொழும்பு] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

தகனக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

[8985]

### இராசையா யோகரெட்ணம் (சபா)

இராசையா யோகரெட்ணம் (சபா) ஜேர்மனியில் அகால மரணமானார்.

அன்னார் கல்வயலைச் சேர்ந்த, காலஞ்சென்ற இராசையா, தெய்வானைப்பிள்ளையின் கனிஷ்ட புதல் வரும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், மயூஸ் சனின் அன்புத் தந்தையும், திருமதி பொ. இராஜேஸ் வரி, சிவபாதசுந்தரம் (லண்டன்), பாலசுப்பிரமணி யம் (ஜேர்மனி), லோகேஸ்வரன் (லண்டன்) ஆகி யோரின் அன்புச் சகோதரரும், பொன்னுத்துரை, திருமதி சி. சந்திரவதனா (லண்டன்), திருமதி பா. செல்வராணி (ஜேர்மனி), திருமதி லோ. சத்தியவதி (லண்டன்) ஆகியோரின் அன்புமைத்துனரும், காண்டீ பனின் அன்புமாமனாரும், சுந்தர், சுதன், தக்ஷபா லினி, தக்ஷபிரியா, தக்ஷாஜினி, உமாமேனன், அரு ணன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோ ருக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
திருமதி பொன்னுத்துரை இராஜேஸ்வரி

'பரணி அகம்'
கல்வயல்,
சாவகச்சேரி

(43709)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாயை நோக்கிச் செலுத்திய ரஷ்ய விண்கலம் கடலில் வீழ்ந்தது!

மொஸ்கோ, நவ 19

செவ்வாய்க்கிரகத்தை ஆராய்வதற்காக ரஷ்யாவினால் செலுத்தப்பட்ட விண்கலம் நேற்று பசுபிக் மாகடலில் நொறுங்கி வீழ்ந்தது.

அமெரிக்க விண்வெளி நிறுவனத்தின் தலைவர் டேவிட் றொக் தகவல் தருகையில், இந்த விண்கலம் பூமியின் வளிமண்டலப் பிரதேசத்தில் பிரவேசித்ததும், எரிந்து சிதறி வீழ்ந்ததாகத் தெரிவித்தார்.

இந்த விண்கலம் மணிக்கு 27 ஆயிரத்து 200 கிலோ மீற்றர் வேகத்தில் பயணம் செய்துகொண்டிருந்தது.

கோடிக்கணக்கான டொலர் செலவில் தயாரிக்கப்பட்ட இந்த விண்கலம் சனிக்கிழமை கஜகஸ்தானில் உள்ள விண்வெளி நிலையத்தில் இருந்து செலுத்தப்பட்டது.

ஆனால் 4 ஆவது கட்டத்தின்போது றொக்கட் சரியாக செயல்படாததால் இந்த விண்கலம் பூமியின் சுற்றுப் பாதையில் இருந்து வெளியேறத் தவறிவிட்டது.

இந்த விண்கலத்தில் கதிர் வீச்சுடைய புளுட்டோனியம் அடங்கிய நான்கு பற்றறிகள் இருந்தன.

விண்கலம் வெடித்து சிதறியபோதும் பற்றறிகளுக்கு ஊறு ஏதும் ஏற்படவில்லை என்று ரஷ்ய விண்வெளி மையத்தின் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

அடுத்த ஆண்டு செப்ரெம்பரில் இந்த விண்கலம் செவ்வாய்க்கிரகத்தை அடையும் என எதிர்பார்க்கப்பட்டது.

செவ்வாய்க் கிரகத்தில் இறங்க வசதியாக 50 கிலோ எடையுள்ள இரண்டு உள்ளமைப்பு வாகனங்களும் விண்கலத்தில் வைக்கப்பட்டிருந்தன. (இ-3)

## பஞ்சாப் சட்டப்பேரவை ஆளுநரால் கலைப்பு

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாண சட்டப் பேரவை கலைக்கப்பட்டுவிட்டது. இதற்கான உத்தரவை மாகாண ஆளுநர் குவாஜா ரஹீம் ஜனாதிபதி பாருக் லெஹாரியின் அனுமதியுடன் வெளியிட்டுள்ளார்.

பஞ்சாப் தவிர்ந்த இதர மூன்று மகாணங்களின் சட்டப் பேரவைகளும் இம் மாதம் 5 ஆம் திகதியன்று தேசிய சட்டப் பேரவை கலைக்கப்பட்ட போது கலைக்கப்பட்டன.

பஞ்சாப் மாநில முதலமைச்சர் மன்சூர் வாட்டு ஏற்கனவே முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்திருந்தார். (இ-10)

## அழகிகளை எதிர்த்து பெங்களூரில் ஆர்ப்பாட்டம்

### 4 ஆயிரம் பேர் கைதாகினர்

அழகு ராணிப் போட்டியில் பங்கு கொள்ள பெங்களூர் வந்துள்ள அழகிகள் தங்கியிருக்கும் விருந்தினர் விடுதியை முற்றுகையிட்டு இடதுசாரிப் பெண்கள்இயக்கம் ஆர்ப்பாட்டம் நடத்தி உள்ளது.

உலக அழகிப் போட்டிக்கு ''சாவு மணி அடிப்போம்,'' ''யார் உண்மையான அழகி அன்னை திரேஸாவா, ஐஸ்வரியாவா'' எனஆர்ப்பாட்டக்காரர்கள் கோசமிட்டனர்.

காவல் துறையினர் தடியடிப் பிரயோகம் நடத்தியதில் மார்க்சிய கட்சியின் முக்கிய பெண் பிரமுகர் சுஹாசினி அலி இலேசாகக் காயமடைந்ததாகச் சொல்லப்படுகிறது.

ஆர்ப்பாட்டக் காரர்களில் 4 ஆயிரம் பேரை காவல் துறையினர் பின்னர் கைது செய்தனர்

அதே சமயம் ''உலக அழகிப் போட்டி நடக்கும் அரங்கினுள் புகுந்து தற்கொலை வெடிகுண்டுத் தாக்குதல் நடத்துவோம்,'' ''சயனைட் குப்பிகளை எடுத்துச் செல்வோம்'' என பெண்கள் இயக்கம் ஒன்று மீண்டும் நேற்று மிரட்டல் எச்சரிக்கை விடுத்துள்ளது (இ-3)

## தாய்லாந்து தேர்தல்

பாங்கொக், நவ. 19

தாய்லாந்தில் நேற்று முன்தினம் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் துணைப் பிரதமர் ஜெனரல் ஹாவிலித் என்செயித் தலைமையிலான ''நியு அஷ்பிரேஷன்'' கட்சி மிகக் குறைந்த வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது. (இ-10)

## பரீட்சை வினாத்தாள் தயாரித்த பேராசிரியர் - ஆசிரியர் தடுப்புக்காவலில்!

### தென்கொரியாவில் விசித்திரம்!

சோல், நவ. 19

அண்மையில் தென்கொரியாவில். உயர்கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான பரீட்சைகளுக்குரிய வினாத்தாள்களைத் தயாரித்த கல்லூரிப் பேராசிரியர்களும் ஆசிரியர்களும் ஒரு மாத காலம் வரை அந்த நாட்டின் அரசின் உத்தரவின் பேரில் ஹோட்டல் ஒன்றில் தடுத்துவைக்கப்பட்டனர்.

வினாத்தாள்களின் இரகசியம் வெளியாகாமல் இருப்பதற்கே இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டு ஹோட்டல் மூடப்பட்டு சீல் வைக்கப்பட்டிருந்தது

முதல் மாடி ஜன்னல்கள் மூடப்பட்டு அவற்றுக்கு கடதாசிகள் ஒட்டப்பட்டிருந்தன ஹோட்டலைச்சுற்றி முட்கம்பி வேலி அமைக்கப்பட்டிருந்தது. ஆயுதமேந்திய பொலீசார் காவலில் அமர்த்தப்பட்டனர் தொலைபேசித் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டிருந்தன. (இ - 10)

## பெனாஸிர் தலைமையில் பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டம்

பதவி நீக்கம் செய்யப்பட்ட பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ தலைமையில் ஆயிரக்கணக்கானவர்கள் கடந்த சனியன்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினார்கள்.

அவரது சொந்த இடமான சிந்து மாகாணத்துக்கு முதலாவது விஜயத்தை அவர் அன்று மேற்கொண்டார்.

தாம் நடத்திவரும் போராட்டம் தனது போராட்டம் அல்லவென்றும்—

அது பாகிஸ்தான் மக்களின் போராட்டம் என்றும்— பெனாஸிர் பூட்டோ செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் விமான நிலையத்தில் வந்திறங்கிய சமயம் ஆயிரக்கணக்கானோர் அவரை வரவேற்றனர்.

விமான நிலையத்தில் இருந்து அவர் வாகனத்தில் ஊர்வலம் சென்றபோது பொலிஸாருக்கும், கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையில் சிறிய மோதல்கள் ஏற்பட்டன. (இ-3)

## உலக அரங்கில்

## ஜெயலலிதா: அழைப்பாணை

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு மாநில கண்காணிப்பு மற்றும் லஞ்ச ஊழல் ஒழிப்பு திணைக்களம் சில லஞ்ச ஊழல் வழக்குகள் தொடர்பாக அழைப்பாணை அனுப்பியுள்ளது.

# போரைத் தீவிரப்படுத்தவே அரசு செயற்படுகின்றது

## நாடாளுமன்றில் கூட்டணி எம்.பி உரை

கொழும்பு, நவ. 19

''யுத்தம் தீவிரப்படுத்தப் படுகின்றது. ஆயுதங்கள் வாங்குவதும், ஆட்களை படைக்குச் சேர்ப்பதும் முடுக்கி விடப்பட்டுள்ளன. இது சமாதானத்துக்கு செல்லும் வழிதானா என்று கேட்கத் தோன்றுகிறது''.

மட்டக்களப்பு எம். பி. ஜோசப் பரராஜசிங்கம் மேற்கண்டவாறு நாடாளுமன்றத்தில் கேட்டார்.

எமது மக்கள் அரசாங்கத்தின் தயவில் அகதிகளாக வாழ வேண்டும் என்று விரும்புபவர்கள் அல்லர்.

உழைத்து கௌரவமாக வாழவே அவர்கள் விரும்புகிறார்கள்.

அத்தகைய நோக்கம் கொண்டவர்களை முகாம்களில் அடைத்துவைத்து கைதிகளைப் போல நடத்துவதன் மூலம் தமிழ் மக்களின் உள்ளங்களை எப்படி வெல்லப் போறீர்கள்?

தமிழ் மக்களை அழிப்பதற்கு ஆர்வம் காட்ட வேண்டாம். ஆக்கப்பாதையில் பிரவேசியுங்கள். அப்போதுதான் சமாதானத்தின் கதவு திறக்கும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## ஜி.சீ.ஈ (சா.த.) பரீட்சைக்கு 6 லட்சம் பேர் தோற்றுவர்

### சிறைகளிலும் பரீட்சை எழுத வசதி

கொழும்பு, நவ. 19

டிசம்பர் 12 இல் ஆரம்பமாகும்ஜி.சீ.ஈசாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவரின் எண்ணிக்கை 5 இலட்சத்து 85 ஆயிரத்து 619.

இவர்களில் 3 இலட்சத்து 85 ஆயிரத்து 619 பேர் பாடசாலை பரீட்சார்த்திகள். 1 இலட்சத்து 95 ஆயிரத்து 112 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள்.

3,968 பரீட்சை நிலையங்களும் 500 இணைப்புப் பரீட்சை நிலையங்களும் அமைக்கப்படும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 624 பரீட்சை நிலையங்கள் இருக்கும். பரீட்சை நிலையங்களின் எண்ணிக்கை இவ்வாண்டு அதிகரிக்கப்படவில்லை.

வடக்கு – கிழக்குமாகாணத்தில் இப்பரீட்சைக்கு தோற்றுபவர்களின் சரியான எண்ணிக்கை தெரியவில்லை என்று பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளை மகசீன் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளில் 68 க்கு அதிகமானோர் ஜி. சி. ஈ சாதாரணதரப் பரீட்சைக்கு இம் முறை தோற்றவுள்ளனர். மகசீன் சிறையில் இதற்காக பரீட்சை நிலையம் அமைக்கப்படும்.

இதனைவிட களுத்துறை, போகம்பரை சிறைகளில் இருக்கும் கைதிகள் சிலரும் இப்பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். தோற்றவுள்ள கைதிகளில் பெரும்பாலானோர் தமிழர்கள் ஆவர். பரீட்சைக்குத் தோற்றவுள்ள சிங்கள கைதிகளில் 4 பேர் அரசியல் கைதிகளாவர். 1989 - 1992 காலத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் 17க்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்கள். (இ- 150)

## குருத்துவ வாழ்வின் ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம், நவ. 19

மிருசுவில் பங்குத்தந்தை அருட்திரு பீற்றர் துரைரத்தினம் அடிகள் தமது குருத்துவ வாழ்வின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவை நாளை 20 ஆம் திகதி கொண்டாடுகிறார்.

இதனையொட்டி மிருசுவில் பங்கு மக்களால் நாளை மிருசுவில் [...] தில் அவருக்கு பொது வரவேற்பு ஒன்றும் அளிக்கப்பட உள்ளது. (இ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு மத்தியஸ்தம்

## கருத்து வெளியிடுவதற்கு றொனி டி மெல் மறுப்பு

கொழும்பு, நவ. 19

இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வெளிநாட்டு மத்தியஸ்தத்தை பயன்படுத்துவது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கவோ —

அல்லது அத்தகைய மத்தியஸ்த முயற்சியை பெறுவதற்கான பிரயத்தனங்களுக்கு பங்களிப்பு செய்யவோ — ஐ. தே. க தயாராக இல்லை.

முன்னாள் நிதி அமைச்சரும், மாத்தறை மாவட்ட ஐ. தே: க எம்பியுமான றொனி டி. மெல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'வெளிநாட்டு மத்தியஸ்தம் குறித்து அரசு பேசுவதன் காரணம் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமே' என்றும் அவர் தெரிவித்தார்.

## நுண்கலைக் கழக மாணவர் கூட்டம்

இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் சகல ஆண்டு மாணவர்களுக்குமான பொதுக் கூட்டம் நாளை புதன்கிழமை காலை 11.30 மணிக்கு இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் நடைபெறும்.

சகல மாணவர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

## ஒட்டிப் பிறந்த இரட்டையர் மரணம்!

கொழும்பு, நவ. 19

ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் இரண்டும் இறந்து விட்டன.

அமெரிக்காவில் உள்ள கலிபோர்ணியாவில் உள்ள ''லோமா'' மருத்துவ மனைக்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்படுவதற்கு 90 நிமிடங்கள் இருக்கையில் இந்த குழந்தைகள் இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

திவுலப்பிட்டி, வத்துப்பிட்டிவெல ஆஸ்பத்திரியில் மார்புப் பகுதியில் ஒட்டிப் பிறந்த இந்த இரட்டைக் குழந்தைகள் சத்திரசிகிச்சை மூலம் பிரித்தெடுப்பதற்காக, அமெரிக்கா கொண்டு செல்லப்படுவதற்காக, கொழும்பு லேடி றிட்ஜ்வே சிறுவர் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே

அங்கேயே குழந்தைகள் இறந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குழந்தைகளைப் பிரிப்பதற்கான சத்திர சிகிச்சைக்குத் தேவையான முழுச் செலவையும் அமெரிக்க கோடீஸ்வரர் ஒருவர் வழங்க முன் வந்திருந்தார்.

நேற்று முன்தினம் மாலை 6-30 மணி அளவில் இக் குழந்தைகள் மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இக் குழந்தைகளுக்கு அதன் தாயார் ''ஹன்சானி'' ''ஹன்ஸிகா'' என்று பெயரிட்டிருந்தார். (இ-ரி)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சாப்பாட்டு மேசை, கதிரைகள், பிள்ளைத் தொட்டில்கள், பாலர் Desk, சோகேஸ், Konica கலர் பிலிம் சுருள்கள், பார்வையிடும் நேரம் பிற்பகல் 1-00 மணி—5.00 மணி. மூகவரி; திருமதி கு. ஸ்ரீரஞ்சன் இல: 75 அரசடி வீதி, யாழ்ப்பாணம். (43694)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 37 வயதான சொந்தத் தொழில் புரியும் இலக்கணத்தில் செவ்வாய் உள்ள, பரணி நட்சத்திரம் மூன்றாம்பாதம் உள்ளவருக்கு மணமகள் தேவை. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் கடித மூலம் உடன் தொடர்பு கொள்ளவும். T.K S.S., புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய். (8978)

# கண்ணீர் அஞ்சலி

## சிற்றம்பலம் அமரேசன்

B. A., Dip.-in.-Ed.

யா/செங்குந்த இந்துக் கல்லூரி.

1996-11-17 ஆம் திகதி, எங்கள் கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியரும், பகுதித் தலைவரும், சாரணர் குழு போதனாசிரியருமாக விளங்கி, கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பெருந் தொண்டாற்றிய

சிற்றம்பலம் அமரேசன்

அவர்கள் அமரரானார் என்ற செய்தி கேட்டு பேரதிர்ச்சியடைந்தோம்.

அன்னாரின் குடும்பத்துக்கேற்பட்ட ஈடுஇணையற்ற இழப்புக்கு ஆறுதல் கூறும் வகையற்ற நிலையில் சொல் இழந்து, செயல் இழந்து, நிற்கிறோம். எங்கள் கண்ணீர் அஞ்சலியையும், ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், மற்றும்
ஊழியர்கள்.

[43703]

# பிறந்ததின வாழ்த்து

## செல்வன்
## ★ த. தமிழ்ச்செல்வன் ★

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த
தவச்செல்வம் - புஸ்பராணி தம்பதிகளின்

சிரேஷ்ட புத்திரன் செல்வன் தமிழ்ச்செல்வன் இன்று (19-11-1996) தனது முதலாவது பிறந்த தினத்தை தமது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மையா, அம்மம்மா, பெரியமாமா, பெரியமாமி, சின்னமாமா, சின்னமாமி, தேவுமாமா, தேவுமாமி, துரைமாமா, துரைமாமி, சித்தப்பா, சித்தி, பழம் அன்ரி, அருந்தவம் அன்ரி, ராணி அன்ரி, நோர்வே மாமா, நோர்வே அத்தை, சுவிஸ் பெரியப்பா, சுவிஸ் பெரியம்மா, லண்டன் மாமா அனைவரும் பல்லாண்டு காலம் சிறப்பாக வாழ வாழ்த்துகிறார்கள்.

செ. தவச்செல்வம்
(அஞ்சலக தந்தித் தூதுவர்)

(43697)

# மனித உரிமைகள் செயலணிக் குழு

## (HUMAN RIGHTS TASK FORCE)

பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம்
(JAFFNA REGIONAL OFFICE)


## பதவி வெற்றிடங்கள்

1. பிராந்திய இணைப்பாளர் (Regional Co-ordinator)
   பணிமனைக்குப் பொறுப்பாக இருப்பதுடன் பொலீஸ், இராணுவம் மற்றும் பொதுமக்களுடன் தொடர்பு கொண்டு அலுவல்களை இணைத்து மேற்கொள்ளும் ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும். தடுத்து வைக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். முறைப்பாடுகள் குறித்து விசாரித்தறியும் திறமை அவசியம்.
2. விசாரணை உத்தியோகத்தர்கள் (Investigation Officers)
   முறைப்பாடுகளைப் பதிவு செய்து விசாரணைகளை மேற்கொள்வதுடன் பிராந்திய இணைப்பாளருக்கு உதவியாக இருத்தல் வேண்டும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
3. பணிமனை அலுவலர்/ பியோன்/ காவலாளி (Office aid/ Peon/ Watcher)
4. இவை முழுநேரப் பணிகளாகும்.
5. விண்ணப்பங்களை ஒரு வாரத்திற்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**CHAIRMAN.**
Human Rights Task Force,
2, Flower Avenue, Colombo - 7.

(சி-3495)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 10 — 03 — 1926 | 30 — 11 — 1995 |

## அமரர் சதாசிவம் நடராசா

திதி: 19 – 11 – 1996

எமது குடும்பத்திற்கு ஒளிரீவூட்டி எமை பாசத்துடன் வளர்த்த ஐயா.

ஒளி விளக்காய் எமது உள்ளத்தில் என்றும் ஒளிர்வீர்.

உம் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

செருக்கல் லேன்,
டச்சு வீதி,
சாவகச்சேரி.

(சி/3515)

# பாடசாலைகளை திருத்த ஜேர்மன் உதவும்

கொழும்பு, நவ. 19

யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளின் போது சேதமடைந்த பாடசாலைக் கட்டடங்களை திருத்துவதற்கு உதவ ஜேர்மன் அரசாங்கம் முன்வந்துள்ளது.

இது தொடர்பான உயர் மட்ட மாநாடு ஒன்று கொழும்பில் அண்மையில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட பாடசாலைகளை நீண்டகால அடிப்படையில் திருத்த 100 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (உ-3)

# பல்பொருள் அங்காடி

வடமராட்சி, நவ. 19

கட்டைவேலி நெல்லியடிபல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், பல்பொருள் அங்காடி விற்பனை நிலையம் ஒன்றை நெல்லியடி பஸ் நிலையத்துக்கு அருகில் திறந்துள்ளது. (இ)


ஓம்
கணபதி துணை

# திருமணம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாது வருஷம் கார்த்திகை மாதம் 7ஆம் நாள் (22-11-96) வெள்ளிக்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் 9-00 மணி வரையுமுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

எனது புத்திரன்
திருநிறை செல்வன்
**மகாலிங்கம்**
அவர்களுக்கும்



எனது புத்திரி
திருநிறை செல்வி
**நகுலேஸ்வரி**
அவர்களுக்கும்

கைதடி வடக்கு மணமகள் இல்லத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கொண்டாட்டம் 4 நாள்கள் நடைபெறும்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு. தா கந்தையா
கைதடி கிழக்கு,
கைதடி.


திரு - திருமதி சு கந்தசாமி
குமரநகர்,
கைதடி வடக்கு, கைதடி.

★ இருவீட்டார் அழைப்பு ★

குறிப்பு: கைதடி வடக்கு வாலை அம்மன் ஆலயத்தில் நடைபெறவிருந்த திருமணம் தவிர்க்க முடியாத காரணத்தால் கைதடி வடக்கு மணமகள் இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

[43696]

# முதலாம் ஆண்டு நினைவு



செல்வன்

## தேவதாசன் கமில்ரன் சதீஸ்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 31 – 03 – 1977 | 19 – 11 – 1995 |

எங்கள் அன்பின் சதீஸ்
எங்கள் அன்புக்குரியவனே!
ஆண்டு ஒன்று சென்றாலும்
எம் மனம் ஆறவில்லையடா.
அழுதாலும் தொழுதாலும்
உம் நினைவு அகலவில்லை.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணாமார்,
தம்பி, மாமாமார்.

கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(சி-3513)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் ஒளி நூலகம்.

உதயன்

## இரண்டாவது சேவை

யாழ்ப்பாணத்துக்கும் மன்னாருக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை ஒன்றை ஆரம்பிக்க முயற்சிகள் செய்யப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கான ஒழுங்குகளை யாழ்ப்பாண அரச அதிபரும், மன்னார் அரச அதிபரும் கூட்டாக நடைமுறைப்படுத்துவர் என்றும் தெரியவருகிறது.

இந்த முயற்சி நடைமுறை ரீதியாக வெற்றியளித்து யாழ். — மன்னார் கப்பல் சேவை விரைவில் ஆரம்பமாகினால் நல்லதே.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து கடந்த வருட இறுதியில் இடம் பெயர்ந்த மக்களில் கணிசமான எண்ணிக்கையினர் மன்னார்ப் பகுதியிலும் அகதிகளாக வாழ்கிறார்கள். உத்தேச கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டால் அவர்கள் தமது சொந்த இடங்களுக்கு விரைவில் வந்து மீளக் குடியமர்வதற்கு உதவுவதாக அமையும்.

யாழ். குடாநாட்டிலிருந்து முதலில் கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்து, பின்னர் அங்கிருந்து மன்னாருக்குச் சென்றவர்களும் உளர். புதிய கப்பல் சேவை, அவர்களும் சொந்த ஊர் திரும்புவதற்குப் பெரிதும் உதவும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தங்கியிருந்த யாழ்ப்பாண அகதிகளில் பெரும்பாலானோர் இப்போது வவுனியாவுக்குச் செல்கின்றார்கள். அவர்கள் திருகோணமலைக்குப் போய் அங்கிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வர வேண்டி உள்ளது.

அந்தப் பயணம் மிகவும் சிரமமானதும் கஷ்டங்கள் நிறைந்ததுமாகும். வீண் தாமதங்களும் ஏற்படுகின்றன.

இதே வேளை, வவுனியா செல்லும் அகதிகள் பெரும் துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். அவர்கள் வெளியே செல்ல முடியாதவாறு, உறவினர்களைச் சந்திக்க முடியாதவாறு முகாம்களில் அடைத்து வைக்கப்படுகின்றார்கள். அது மட்டுமன்றி அவர்களுக்குரிய அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை என்றும் குறை கூறப்படுகிறது.

இப்போது அகதிகளைத் தங்க வைக்கும் முகாம்களாகப் பாடசாலைகளே பயன்படுத்தப்படுகின்றன. அடுத்த மாதம் தொடக்கம் அவர்கள் கொட்டில்களிலேயே தங்க வைக்கப்படவுள்ளனர். இது மேலும் பல அவலங்களை உண்டாக்கும்.

மன்னார் - யாழ்ப்பாணம் கப்பற் சேவை சீராகச் செயற்படுமானால், வன்னியில் உள்ள யாழ்ப்பாண அகதிகள் வவுனியா செல்லாது மன்னார் சென்று வருவது அவர்களுக்குள்ள பல கஷ்டங்களை நீக்கும்.

வவுனியாப் பகுதி, அகதிகள் பிரதேசமாக மாறுவதையும், அகதிகள் யாழ்ப்பாணம் வந்தடைவதில் உள்ள தாமதத்தையும் தவிர்க்கவும் உதவும்.

வன்னியில் இருந்து வவுனியாவுக்கு வாருங்கள் என்று அழைத்துவிட்டு, மக்களைக் கெடுபிடிக்கு உள்ளாகுவதை நிறுத்த அரசு முன்வர வேண்டும்.

மன்னார் - யாழ்ப்பாணம் கப்பல் சேவையை நிலைப்படுத்தி, வன்னியில் உள்ள அகதிகள் மன்னார் சென்று யாழ்ப்பாணம் திரும்புவதற்கு வசதி செய்தால் —

அவர்கள் இரண்டு வழிகளாலும் விரைவில் வந்து சேர வாய்ப்பு உண்டாகும். அரசு கவனம் செலுத்துமா?

# பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் மாவட்ட கோட்டாவை நீக்கவேண்டும்

## தேசிய கல்வி ஆணைக்குழு சிபார்சு

கொழும்பு, நவ. 19

பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் மாவட்ட கோட்டா மூலம் மாணவர்களைத் தெரிவு செய்யும் நடைமுறையை ரத்துச் செய்யுமாறும் --

இதற்குப் பதிலாக பின் தங்கிய பாடசாலைகளைத் தெரிவு செய்து அவற்றுக்கு இந்த அனுமதிக் கோட்டாவை வழங்குமாறும் —

தேசிய கல்வி ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதி முறையை மறுசீரமைப்பதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழு தனது அறிக்கையை நேற்று முன்தினம் அரசிடம் கையளித்துள்ளது.

இந்த அறிக்கையிலேயே மேற்கண்ட சிபார்சை அது செய்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்கு ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சையில் 180 புள்ளிகள் ஆகக் குறைந்த புள்ளியாக இருக்கும் தற்போதைய நடைமுறையை மாற்றி ஆகக் குறைந்த புள்ளியை 200புள்ளிகளாக்க வேண்டும் என்றும் அக்குழு சிபார்சு செய்துள்ளது.

திறமை அடிப்படையிலும், மாவட்ட அடிப்படையிலுமே மாணவர்கள் தற்பொழுது பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

(இ-3-150)

## அகதிகள் நிலைமையை அறிய

## ஐ.நா. அதிகாரியை அழைக்கக் கேட்கிறார் நீலன்

"உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் குறைகளை நேரில் அறிய இடம் பெயர்ந்த மக்களின் விவகாரங்களுக்கு பொறுப்பான ஐ நா அமைப்பின் பிரதிநிதியை இலங்கைக்கு அழைக்க வேண்டும்.''

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள், அகதிமுகாம்களிலும் ஏனைய இடங்களிலும் தங்கி அனுபவிக்கும் கஷ்டங்களை நேரில் அறிய இவரது வருகை உதவும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## தெற்கில் புதிய கட்சி அமைப்பதற்கு முயற்சி

கொழும்பு நவ. 19

தென்னிலங்கையில் உள்ள பிரதான அரசியல் கட்சிகளின் போக்குகளில் அதிருப்தி கொண்ட குழுவினரும், அக்கட்சிகளில் இருந்து விலகியோரும் மற்றும் விடுபட்டோரும் சேர்ந்து புதிய அரசியல் கட்சி ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகியவற்றிலிருந்து விலகியவர்கள், பிரிந்து சென்றவர்கள் புதிய அரசியல் முன்னணி ஒன்றை உருவாக்குவதற்கான பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தமுன்னணியில் தினேஷ் குணவர்த்தனா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறியவந்தது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சந்திரிகா தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் போட்டியான மூன்றாவது சக்தியாக புதிய முன்னணி உருவெடுக்கும் என்று அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

இந்த மூன்றாவது அணிக்கு காலஞ்சென்ற காமினி திஸநாயக்காவின் மனைவி சிறிமா திஸநாயக்கா தலைவராக்கப்படுவார் என்று சொல்லப்படுகிறது.

தினேஷ் குணவர்த்தனா, சுசில் முனசிங்கா ஆகியோரின் பெயர்களும் தலைவர் பதவிக்கு அடிபடுகின்றன.

புதிய முன்னணியைத்தோற்றுவிப்பது சம்பந்தமான கலந்துரையாடல் கடந்த மாதம் 27 ஆம் திகதி வெள்ளவத்தையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் சுமார் 30 பிரமுகர்கள் கலந்து கொண்டனர். மேல் மாகாண சபையின் தலைவர் ஆரியரத்னா ஜயதிலக அமைப்புக் குழுவின் தற்காலிக தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். [அ]

## வெங்காயத்தை வைத்து காத்திருக்கும் விவசாயிகள்

வலி தென் மேற்கு, நவ. 19

விவசாயிகளிடமிருந்து வெங்காயக் கொள்வனவு இன்னும் இடம்பெறவில்லை.

பல அந்தர் வெங்காயத்தை வைத்துக்கொண்டு விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

கூட்டுறவு சமாசம் வெங்காயக் கொள்வனவில் ஈடுபடும் என அறிவிப்பு விடுவிக்கப்பட்ட போதிலும் இன்னும் வெங்காயக் கொள்வனவு விடயம் இழுபறி நிலையிலேயே உள்ளது.

கூட்டுறவு சமாசம் வெங்காயத்தை கொள்வனவு செய்வதற்கு பணம் இல்லை எனக் கையை விரித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் இதுபற்றி பிரஸ்தாபிக்கப்பட்ட போது யாழ். அரசாங்க அதிபர் வெங்காயக் கொள்வனவை துரித கதியில் ஆரம்பிக்கும்படி சமாசத் தலைவரிடம் கேட்டுக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் இது வரை முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எதுவும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை என்று வெங்காய உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வலி. தென்-மேற்கு [illegible] றவுச் சங்கக் கிளை [illegible] வொன்றிலும் அறிவித்தல் பலகைகளில் வெங்காயக் கொள்வனவு குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

அதில் விவசாயிகள் தம்மிடமுள்ள வெங்காயத்தின் அளவைச் சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

ஆனால் கொள்வனவு எப்போது ஆரம்பிக்கப்படும் என்பது பற்றி அறிவிக்கப்படவில்லை.

இதற்கிடையில் பொறுமை இழந்த விவசாயிகள் பலர் வெங்காயத்தை வெளிச் சந்தையில் விற்பனைக்கு விட்டு வருகின்றனர்.

இதனால் பிரதான சந்தைகளில் வெங்காயத்தின் விலை கிலோ 8 ரூபாவாக வீழ்ச்சி அடைந்துள்ளது. (இ-145)

### நாளை

கார்த்திகை 5
புதன்கிழமை
திதி: தசமி
பிற்பகல் 3.14வரை.
நட்சத்திரம்: பூரட்டாதி
பிற்பகல் 1 37 வரை.
ராகுகாலம்: 12 10- 1.40
[illegible] 4.40 - 6.10
([illegible]
பழைய நேரப்படி)

## பொறி வெடியில் சிக்கிய சிப்பாய் கால் இழப்பு

கொழும்பு, நவ. 19

வாழைச்சேனை மீராவோடை இராணுவ முகாமிலிருந்து கிண்ணையடி நோக்கி ரோந்து சென்ற படையினர் புலிகளின் பொறிவெடிக்கு இலக்கானார்கள்.

இச்சம்பவத்தில் இராணுவ வீரர் ஒருவர் தனது கால் ஒன்றை இழந்ததுடன் காயங்களுக்கும் உள்ளானார்.

(இ-4)

## இளம் பெண் மரணம்

தென்மராட்சி, நவ. 19

கர்ப்பப்பைக்கு முன்னுள்ள "பலோப்பியன்'' குழாய்க்குள் கருத்தங்கி குழாய் வெடித்ததில் இளம் குடும்பப்பெண் ஒருவர் மரணமான சம்பவம் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி கண்டி வீதியைச் சேர்ந்த தயாரூபி கோவிந்தராஜா (வயது 27) என்னும் ஆசிரியையே மரணமானவராவார்.

குழாய் வெடித்ததால் அதிக அளவு இரத்தப்பெருக்கு ஏற்பட்டதாகவும்—

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு உடனடியாக யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்படுகையில் இடைவழியில் அப்பெண் மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## வடமராட்சியில் விதை நெல்

வடமராட்சி, நவ. 19

வடமராட்சி பிரதேச நெற்செய்கையாளர்களுக்கு புலோலிகமநல சேவைநிலையத்தில் தற்போது விதைநெல் வழங்கப்பட்டு வருகிறது.

(இ)

## சித்திர உதவி ஆசிரியர் பரீட்சை

சித்திரக் கலை உதவி ஆசிரியர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகள் கொழும்பு வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 24-12-93ல் வர்த்தமானி மூலம் கோரப்பட்டு 2-7-94 இல் பரீட்சை நடத்தப்பட்டது. பரீட்சைப் பெறுபேறுகள் இவ்வருடம் ஓகஸ்ட் மாதத்தில் கிடைக்கப் பெற்றன.

இப்போது நேர்முகப் பரீட்சைக்கு கொழும்பு டி.எஸ். சேனநாயக்கா மகாவித்தியாலயத்துக்கு வருமாறு அழைப்புக் கடிதம் வந்துள்ளது. தற்போதைய சூழ்நிலையில் நிலவும் பிரயாணக் கஷ்டங்களைப்பற்றி, நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அதிலும் பெண் பிள்ளைகள் தனியே சென்று திரும்புவதென்றால் எவ்வளவு சிரமம்! குறிப்பாக கொழும்பில் உற்றார், உறவினர் இல்லாதோர் எவ்வளவு கஷ்டப்படவேண்டி இருக்கும்?

குறிப்பிட்ட திகதியில் (23-11-96 இல்) சமுகம் அளிக்காவிடில் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார் எனவும் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது இரண்டரை வருடங்களுக்கு மேலாகக் காத்திருந்து, கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போன கதையாகப் போய்விடுமோ என்ற அச்சத்துடன் இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் ஏங்கி நிற்கிறார்கள்.

ஆகையால் இந்நேர்முகப்பரீட்சையை யாழ்ப்பாணத்திலேயே நடத்துவதற்கு கல்வித் திணைக்களத்தினர், இப்பரீட்சார்த்திகளுக்கு உதவ முன்வரமாட்டார்களா? தற்போது குடாநாடு இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ்தானே உள்ளது. அப்படியான ஒரு சூழ்நிலையில் நேர்முகப்பரீட்சையை இங்கு வைக்கலாம். ஆகவே சித்திரக்கலை உதவி ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் வைத்து உதவுமாறு மிகவும் பணிவுடன் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

க. சிவானந்தம்

யாழ்ப்பாணம்.

## கேட்பார் யாருமில்லையா?

வாசகர் திருமுகம்

மாதகல், இளவாலை, மாரீசன்கூடல் போன்ற இடங்களுக்கு ஒரே ஒரு பேருந்து மாத்திரம் சேவையில் ஈடுபடுகின்றது. இக் கிராமங்களில் உள்ள மக்கள் ஒரே ஒரு பேருந்தின் மூலம் தான் வேறு இடங்களுக்குச் செல்ல முடியும்.

முன்னர் காலை 7 மணிக்கு மாதகலில் இருந்து புறப்படும் பேருந்து கடந்த ஒரு மாத காலமாக 8மணிக்குப் பின்னரே புறப்படுகின்றது.

இந்தப் பேருந்து 10மணிக்கு யாழ்ப்பாணத்தைச் சென்றடைகின்றது. வைத்திய வசதியில்லாத நிரந்தர நோயாளர்கள், கிளினிக் செல்பவர்கள் இதனால் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். மக்கள் தமக்குள்ளேயே இந்தப் போக்குவரத்துப் பிரச்சினையை முணு முணுத்துக் கொள்கின்றனர். வ.பி. போக்குவரத்துச்சபை மேலதிகமாக ஒரு பேருந்தை சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் மக்களின் குறிப்பாக நோயாளர்களின் அவல நிலையைப் போக்க முடியும்.

உரியவர்கள் இது சம்பந்தமாக ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுப்பார்களா?

ப. கமலா

மாதகல் மேற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible] நூலகம்



# தாம் பதவி துறக்கப்போவதில்லை என்கிறார் பெண் நீதியரசர் ஷிரானி

கொழும்பு, நவ. 19

தனது நியமனத்துக்கு எதிராக சட்டத்தரணிகள் சங்கம் கடும் எதிர்ப்பைக் காட்டிய போதிலும் தாம் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யப் போவதில்லை என இலங்கை உயர் நீதிமன்றத்தின் முதலாவது பெண் நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ள ஷிரானி பண்டாரநாயக்க தெரிவித்தார்.

கடந்த வார இறுதியில் நடைபெற்ற சட்டத்தரணிகளின் சங்கக் கூட்டத்தில் அவரது நியமனத்தைக் கண்டித்து ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

38 வயதுடைய ஷிரானி பண்டாரநாயக்கவுக்கு உயர் நீதிமன்ற நீதியரசராகப் பணியாற்றத் தேவையான அனுபவம் இல்லை எனவும் — அவருக்குச் சட்டத்தரணி அனுபவத்திலும் பார்க்க கல்விச்சேவை தொடர்பான அனுபவமே அதிகம் உள்ளது எனவும் — சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்தது.

ஷிரானி பண்டாரநாயக்க நீதி மற்றும் அரசியல் விவகார அமைச்சர் ஜீ எல். பீரிஸுக்கு நெருங்கிய உறவினர் எனவும் —

கொழும்பு பல்கலைக்கழக நிர்வாக பீடத்தில் இருவரும் ஒன்றாகப் பணிபுரிந்தனர் எனவும் சொல்லப்படுகிறது.

ஷிரானி பண்டாரநாயக்கவின் நியமனமானது அரசாங்கத்துக்கு விசுவாசமானவர்களைக் கொண்டு உயர் நீதிமன்ற நீதி அரசர்கள் பதவியை நிரப்பும் முயற்சியாகும் என சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் டெஸ்மண்ட் பெர்னாண்டோ தெரிவித்தார். (இ-10)

---

நீதிமன்றத்தின்—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இல்லையோ என்ற சந்தேகத்தை அது ஏற்படுத்தியதாக சிலர் கருத்து வெளியிட்டதாகவும்—

செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

ஆனால் இத்தகைய வழக்குகளில்— இந்தளவு ஆரம்பக் கட்டத்தில்—சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த அரச சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் ஆஜராவது வழமையல்ல என அத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-4-10)

---

ஆயுதங்களை—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை மேற்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் ஆயுதங்களைக் கீழே வைப்பது தொடர்பான நிபந்தனைகளை அரசு தளர்த்த வேண்டும். ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குப் பதிலாக ஆயுதங்களை மௌனம் அடையச்செய்ய வேண்டும் என்றவாறான அணுகு முறையைக் கையாள வேண்டுமென நான் ஜனாதிபதியிடம் வற்புறுத்தியிருக்கின்றேன்.

பேச்சு வார்த்தை தொடர்பான கால அட்டவணை குறித்த நிபந்தனையில் நியாயம் இருக்கிறது.

கடந்த காலங்களில் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையைப் பயன் படுத்தி இருதரப்பினரும் தங்களைப் பலப்படுத்தி வந்த வரலாற்று அனுபவங்களையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ-34)

---

அடுத்த—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டன் பேச்சு நடத்தினோம். அவர்களைப் பேச்சுவார்த்தைக்குக் கொண்டு வருவது இலகுவானதல்ல. சமாதானத்துக்கு அவர்களைச் சம்மதிக்க வைக்க முடியாமலுள்ளது.

கேள்வி:- அரசின் சமாதான முயற்சிகள் ஸ்தம்பிதமடைந்து விட்டனவா?

பதில்:- சமாதான முயற்சிகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன எமது சமாதான முயற்சிகளுக்கு வெளிநாடுகள் அதிக ஆதரவு அளித்து வருகின்றன. பிரபாகரன் சம்மதிக்காவிட்டாலும் நாம் முன் எடுக்கும் சமாதான முயற்சிகளில் வெற்றி பெறுவோம்.

கேள்வி:- ஐ. தே. க. ஆதரவு தராவிட்டால் தீர்வுத் திட்டத்தைச் செயற்படுத்த முடியாதா?

பதில்:- தீர்வுத் திட்டம் வெறும் கடதாசி அல்ல. பெரும்பான்மையானவர்கள் ஏற்காது விட்டால் அதற்கு மதிப்பு இல்லை கருத்துக் கணிப்பு மூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை — மக்கள் ஆணையை — பெற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றக் கூடியதாக இருக்கும். (இ-3)

---

# லிங்க நகரில் குடியிருப்புகள் மத்தியில் இராணுவ முகாம்

## நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 19

திருமலை மாவட்டத்தில் லிங்க நகர் குடியிருப்புகளின் மத்தியில் இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு பயிற்சி முகாம் என்று சொல்லப்படுகிறது. மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் இராணுவ பயிற்சி முகாம் அமைப்பது எந்த வகையில் ஏற்புடையதென்பது தெரியவில்லை. இவ்வாறான நிலைமையினால் 40 குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறி உள்ளன.

இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி எம். பி. மு. சந்திரகுமார் கடந்த புதன் கிழமை நாடாளுமன்றத்தில் அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தில் பேசுகையில் கூறினார்.

யாழ்ப்பாணத்தை ஆயுதப் படையினர் கைப்பற்றிய பின் ஆண்களும் பெண்களும் காணாமற் போகும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (இ-ரி)

# எர்சாத்துக்கு பிணை மறுப்பு

பங்களாதேஷ் முன்னாள் ஜனாதிபதி எர்சாத் பிணை கோரி தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் நிராகரித்தது

சுமார் ஒரு கோடி 50இலட்சம் ரூபா செலவில் விமானப் படைக்கு ராடர் கருவி ஒன்றைக் கொள்வனவு செய்தது தொடர்பான வழக்கிலும் —

மேஜர் ஜெனரல் அபூல் மன்சூரை 1981 ஆம் ஆண்டு படுகொலை செய்தது தொடர்பான வழக்கிலுமே அவருக்குப் பிணை மறுக்கப்பட்டுள்ளது. (இ-3)

# "ஐக்கிய இலங்கை" என்ற பதத்துக்கு ஸ்ரீமனியும் ஹமீத்தும் எதிர்ப்பு

கொழும்பு, நவ. 19

அதிகாரப் பரவலாக்கல் குறித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு கடந்த மாதம் 29 ஆம் திகதி அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தலைமையில் கூடியபோது, இரண்டு முக்கிய விஷயங்களில் பரந்தளவில் கருத்துடன்பாடு காணும் புதிய நிலை ஒன்று ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் பீரிஸ் சில வாரங்களுக்கு முன்பு நகல் அதிகாரப் பரவலாக்கல் சட்டம் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார். அதன் முன்னுரையில் 'ஐக்கிய இலங்கை' என்ற பதம் பாவிக்கப்பட்டிருந்தது. இதனை ஐ தே. க. மற்றும் ஸ்ரீமனி அத்துலத் முதலியின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி எதிர்த்தன.

29 ஆம் திகதி நடந்த கூட்டத்தில் ஐ. தே. கவின் எம். பியான ஏ. சி எஸ். ஹமீத் அதற்கு ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார். அந்த முதல் வசனத்தில் உள்ள 'ஐக்கிய' என்ற சொல்லை எடுத்துவிட்டு 'இலங்கை இறைமையுள்ள குடியரசு' என்று அமையவேண்டும் என்று கூறியது அவரின் திருத்தம்.

இலங்கைக் குடியரசு என்று அழைக்கப்படும் என்று அந்த வசனம் தொடர்கிறது. ஒற்றையாட்சி இலங்கையா, ஐக்கிய இலங்கையா என்ற மோதலுக்கு இப்படி ஓர் இணக்கம் காணப்படுவது என்று குழு தீர்மானித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஷரத்து இரண்டுக்கும் சாகுல் ஹமீத் இன்னொரு திருத்தம் கொண்டு வந்தார். 'இலங்கைக் குடியரசு பௌத்தத்துக்கு முதலிடம் அளிக்கும். அதன்படி அரசு பௌத்த சாசனத்துக்கு ஆதரவளிக்கும் அதே நேரத்தில் ஏனைய மதங்களுக்கு ஷரத்து 15.(1), 15 (2) கீழ் வழங்கப்பட்ட உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் என்று ஹமீத்தின் திருத்தத்தில் கூறப்பட்டுள்ளது. முன்னர் பீரிஸ் சமர்ப்பித்த நகல் சட்டத்தில் உத்தரவாதம் என்ற சொல்லுக்குப் பதில் உறுதிப்படுத்துதல் என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருந்தது. இத்திருத்தமும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (இ-150)

# பட்டினிக்கு எதிராக போரிட அழைப்பு

ஹேரம் நவ. 19

பட்டினிக் கொடுமையை எதிர்த்துப் போராடுவதில் உலக நாடுகள் ஒத்துழைக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

உலக உணவு உச்சி மாநாட்டில் வைத்தே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

உலக நாடுகள் போஷாக்கின்மைக்கான போலிக்காரணங்களைக் கைவிட்டு அதனைச் சமாளிப்பதற்காக பாடுபட வேண்டும் என்று ஐரோப்பிய உணவு ஆணையாளர் பிராங் பீங்லர் கூறினார்.

அபிவிருத்தியடைந்த நாடுகள் தனிப்பட்ட முறையிலும். தமது நாடுகள் மூலமாகவும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உணவு வசதியற்றவர்களுக்கு உதவ முன் வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (இ-8)

---

சீராற்ற—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோணமலை செல்ல இருந்தனர்.

அதேவேளை — கொழும்பில் இருந்து பெரிய கப்பல் ஒன்றை அமர்த்தி, திருகோணமலை பிரிமா இறங்கு துறையில் வைத்து பயணிகளை ஏற்றி காங்கேசன் துறைக்கு அனுப்ப முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாக திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் திருமலையில் [illegible] தொடர்கின்றன. (இ-ரி-3-150)

# கிழக்கில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

மட்டக்களப்பு, நவ. 19

மாவீரர் வாரத்தில் கிழக்கில் தாக்குதல்கள் இடம் பெறலாம் என்ற காரணத்தால் மட்டக்களப்பு — கொழும்பு வீதியிலும், திருகோணமலையிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே உள்ளதை விட மேலும் 10 தடைமுகாம்கள் மட்டக்களப்பு — கொழும்பு வீதியில் புதிதாக அமைக்கப்பட்டு அவற்றில் பயணிகள் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

திருகோணமலையிலும் சந்திகள் தோறும் படையினர் சோதனை நிலையங்களை அமைத்து மக்களைச் சோதனையிட்டு வருகின்றனர். (இ-3-150)

# ரபீனைக் கொன்றவர் சலுகை கேட்கிறார்

டெல் அவில் நவ. 19

இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் யிட்சக் ரபீனைக் கொலை செய்த குற்றத்துக்காக சிறைவைக்கப்பட்டுள்ள ஈகல் அமிர் தனது அனுபவங்களைப் புத்தகமாக எழுதுவதற்கும் —

தனது சட்டப்படிப்பினை தபால் மூலம் தொடர்வதற்கும் — வசதியாக தனக்கு கணணி ஒன்று வழங்கப்பட வேண்டும் என நீதிமன்றத்திடம் கேட்டுள்ளார்.

அத்துடன் தனது குடும்பத்தினரும் வழக்கறிஞர்களும் தன்னை வந்து சந்திக்க வசதியாக தனது வீட்டுக்கு அண்மையில் உள்ள சிறைச்சாலைக்கு தான் மாற்றப்பட வேண்டும் எனவும்—

தனது செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு சிறைச்சாலை அறையில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கருவிகள் அகற்றப்பட வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

# யெல்ஸின் ஓய்வெடுக்க செல்கிறார்

ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ஸின் கிரெம்ளின் மருத்துவ மனையிலிருந்து எதிர் வரும் வியாழன் அல்லது வெள்ளிக்கிழமை மொஸ்கோவின் மேற்குப் புறநகர் பகுதியிலுள்ள ''மர்மீகா'' இல்லத்துக்கு ஓய்வெடுப்பதற்காக அனுப்பப்படவுள்ளார் என அவரது மருத்துவ அதிகாரி நேற்றுத் தெரிவித்தார்.

இருதய அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் யெல்ஸின் மிகவிரைவாகக் குணமடைந்து வருகிறார். (இ-10)

---

## கண்ணீர் அஞ்சலி

அ. சிறீஸ்கந்தாவின் தந்தையாரான,

**சிற்றம்பலம் அமரேசன்**

(பகுதித் தலைவர், செங்குந்தா இந்துக்கல்லூரி)

அவர்களின் திடீர் மறைவையிட்டு நாம் ஆழ்ந்த கவலை அடைகிறோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கல்வியங்காடு
ஞானபாஸ்கரோதய ச. ச. நி நண்பர்கள்,
சிங்கள வகுப்பு மாணவர்கள்,
கோப்பாய் தெற்கு நண்பர்கள்.

(43711)

## கண்ணீர் அஞ்சலி

**திருமதி தயாரூபி கோவிந்தராஜா**

(இசை ஆசிரியர் - யா/ ஸ்ரீகணேச வித்தியாலயம் - சரசாலை)

இன்னிசையின் இளம் குயிலாய்
மென் விரலால் வயலினதை
மீட்ட வரும் இசை ஒலியாய்
பண்புகளின் இருப்பிடமாய்
அன்பு நிறை ஆசிரியை - ஆகி
எமதுளம் நிறைந்தாய்!
நீ இல்லறத்தில் ஈடுபட்ட நினைவுகள்
நாம் மறக்க முன்னே நீ மறைந்த தேனம்மா?
எமைக் கலங்க விடுத்திங்கே!

தென்மராட்சி
இசை ஆசிரியர் சங்கம்.

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/1 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19-11-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org